1979 மார்ச் 3]

கோவை மாவட்டம் வெள்ளிங்கிரி மலையில் உள்ள கோவிலுக்குச் செல்ல மலைப்பாதை அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. ஆ. நடராசன் : அந்தக் கோவில் ஏழுமலைகளைக் கொண்டிருப்பதால் அந்தப் பகுதியில் ஏராளமான பக்தர்கள் வந்து செல்வதற்கு அங்கே பாதை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அந்தக் கோவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் தொடரிலிருந்து ஏழு மைல் தொலைவில் ஆறாயிரம் அடி உயரத்தில் உள்ளது. அதை அடைகிறவழிகளில் கடுமையான புதர்களும், அடர்ந்த காடுகளும், செங்குத்தான பாறைகளும் உள்ளன. ஆகவே கோடிக்கணக்கான ரூபாய் செலவிட்டால்தான் அதற்கு பாதைகள் அமைக்க இயலும். எனவே அது பற்றிய பரிசீலனை இப்போது அரசினிடம் இல்லை.

பிளவக்கல் அணைப்பகுதியை சுற்றுலா மையமாக்கல்.

* வினா எண். 201—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு சுற்றுலா வாரியம் திருவில்லிபுத்தூர் தொகுதியில் உள்ள பிளவக்கல் அணைக்கட்டு பகுதியை சுற்றுலாவுக்கான இடம் என்று ஏற்றுக்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன்: பிளவக்கல் அணைக் கட்டுப் பகுதி சுற்றுலா மையமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும் அதை மாவட்ட உலாத் தலமாக (District Excursion Centre) பயன்படுத்தபரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : வட நாட்டிலிருந்து வருகிற யாத்திரீகர்கள், அவர்கள் இங்கு வரும்போது மதுரையில் உள்ள மீனாட்சி அம்மன் கோவில் மற்றும் ராமேஸ்வரத்திற்கு சென்று விட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஆண்டாள் கோவிலுக்கும் சென்று விட்டு செல்கிறார்கள். ஆகவே அந்தப் பிளவாக்கல் அணைக்கட்டுப் பகுதியை சுற்றுலா மையமாக்கினால் தினந் தோறும் வரும் பிரயாணிகள் பார்த்து மனம் மகிழ்ந்து செல்ல ஏதுவாக இருக்கும். எனவே அப்பகுதியை சுற்றுலா மையமாக்

கினால் அந்தப் பகுதிகள் செழிப்படையும் என்பதோடு அந்தப் பகுதி மக்கள் மனதில் ஒரு எழுச்சியும் ஏற்படும் என்பதால் அமைச்சர் அவர்கள் இதில் நேரடி கவனம் செலுத்த முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ஆர், எம், வீரப்பன் : நான் நேரடி கவனம் செலுத்தும் முறையில் அந்தப் பகுதியை சென்ற ஆண்டு நேரில் சென்று பார்வையிட்டேன். அங்கு கோவிலாறு, பெரியாறு என்ற இரண்டு அணைத்தேக்கங்கள் இருக்கின்றன. அதையொட்டி அந்தப் பகுதியை நல்லமுறையில் மக்கள் வந்து விடுமுறைக் காலங்களில் பொழுதுபோக்கிச் செல்லவும் கண்டு மகிழ்ந்து? செல்லவும் அவ்வகையில் ஏற்பாடுகள் செய்ய இயலும் என்று தெரிவித்து அது சம்பந்தமாக பொதுப்பணித்துறை மற்றும் இரிகேஷன் துறையும் சேர்ந்து அதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று சுற்றுலாத்துறை கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஆசிரியர் பயிற்சியில் புதிய முறை

*வினா எண், 202—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆசிரியர் பயிற்சியில் இதுவரை கையாளப்பட்டு வந்த முறையை கைவிட்டு புது முறையை கையாள அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ)&(ஆ) : 1977—1978—முதல் செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிக்கான திருந்திய பாடத்திட்டம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் அமுலுக்கு வந்துள்ளது, அதனை மாற்றும் உத்தேசம் எதுவும் இல்லை.

திரு, என். கிட்டப்பா : ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் தற்போது திராவிட முன்னேற்றக் கழகக் காலத்தில் இருந்த அளவுக்கு இல்லாமல் பெரும்பாலும் மூடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சில பயிற்சிப் பள்ளிகளே இருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர்கள்—மாணவர்கள் முறை ஒழுங்கு படுத்தப்பட்டால் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்கும் வேலை கிடைக்கும் என்ற நிலை இருப்பதால், இந்த முறையை பின்பற்ற அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதுடன், புதிதாக ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளை திறக்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.